செ.வெ.எண் : 41/ஏப்ரல் நாள்: 30.04.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை முன்னிட்டு தேர்தல் வாக்குப்பதிவிற்காக 2114 வாக்குச்சாவடிகள் அமைத்திட வரைவு செய்யப்பட்டுள்ளது.

## வரைவு வாக்குச்சாவடிகள் பட்டியலினை வெளியிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (30.04.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உள்ளாட்சி அமைப்பின் வரைவு வாக்குச்சாவடி பட்டியல்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தற்போது தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக சமீபத்தில் வெளியிடப்பட்ட சட்டமன்ற வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் தயார் செய்திடவும், வாக்குச் சாவடிப் பட்டியலை இறுதி செய்திடவும் அறிவுரை வழங்கியுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய அறிவுரைப்படி ஜனவரி 2019-ல் வெளியிடப்பட்ட சட்டமன்ற வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய வார்டு வாரியான வாக்காளர் பட்டியல்கள் தயாரிப்பதற்கான பூர்வாங்கப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாக்குச் சாவடி அமைக்கும் நேர்வில் நகர்புற தேர்தலை பொருத்தமட்டில் ஒரு வாக்குச் சாவடிக்கு குறைந்தபட்ச வாக்காளர்களாக 400 எனவும், அதிகபட்ச வாக்காளர்களாக 1400 எனவும், ஊரக பகுதிகளுக்கான தேர்தலை பொருத்தமட்டில் குறைந்தபட்சம் 400, அதிகபட்சம் 1000 வாக்காளர்கள் வரை அனுமதிக்கலாம் எனவும், அவசியம் ஏற்படின் சூழ்நிலைக்கேற்ப அதிகபட்ச வாக்காளர் எண்ணிக்கையை 1150 வரை அனுமதிக்கலாம் எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்த மாவட்டத்தில் நான்கு நகராட்சிகளில் 219 வாக்குசாவடிகளும், 7 பேரூராட்சிகளில் 111 வாக்குச் சாவடிகளும், 11 ஊராட்சி ஒன்றியங்களில் 1784 வாக்குச் சாவடிகளும் ஆகமொத்தம் 2114 வாக்குச் சாவடிகள் அமைக்க வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டு 23.04.2019 அன்று வரைவு வாக்குச்சாவடிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 2011 தேர்தலின்போது அனுமதிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையைவிட தற்போது 71 வாக்குச் சாவடிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விதம் வெளியிடப்படும் வரைவு வாக்குச்சாவடிப் பட்டியலின் பேரில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் ஏதும் வரப்பெறின் அவற்றை உரியவாறு பரிசீலனை செய்து தேவைப்படின் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு இறுதி செய்யப்பட்ட வாக்குச்சாவடிப் பட்டியல் 06.05.2019 அன்று வெளியிடப்பட்டு அதன் அச்சுப் பிரதிகள் விநியோகம் செய்யப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சித் தேர்தல்) திரு.அ.கணேசன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, உள்பட அரசு அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**